97

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 3 Vol. 3	வெகுதான்யஹு ஆடிமீ 1உ ஜுலை—1938	இதழ் 4. No. 4.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

மூளும்வினை சேர மேல்கொண்டி டாஐந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி யதிபார

மோகவினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடஅரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துளதாகி

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்க
ணுமமதி மீதி லூறுங்க லாஇன்ப அமுதூறல்

நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்போ டனல்வாயு

காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து தோழுமாது

வாளமுழு தாளு மோர்தண்டு ழாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி ஞளின்சோல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை-யிளையோனே

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீரனே செந்தில் வாழ்கின்ற பெருமாளே.

பதவுரை.

காள விடம் ஊணி - ஆலகாலம் என்னும் கொடிய விடத்தை யருந்தியவரும், மாதங்கி - மதங்க முனிவருக்குப் புதல்வியாக அவதரித்தவரும், வேதம் சொல் பேதை - வேதங்களால் புகழப்படுகின்றவரும், நெடுநீலி - பெருந்தகைமையுடைய துர்க்காதேவியும், வந்த காலன் விழ - (மார்க்கண்டேயரைப் பற்றும்பொருட்டு) வந்த இயமன் இறந்துவிழுமாறு, பாதங்களால் மோது சாமுண்டி - திருவடிகளால் உதைத்து வீழ்த்திய காளியம்மையும், பார் - மண், அம்பொடு - நீருடன், அனல் - தீ, வாயு - காற்று, கா(ந்)தி முதிர்வனம் - (சந்திர சூரியர் உடுக்கள் இருந்து பிரகாசிப்பதால்) பேரொளி மிகுந்துள்ள ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களிடத்தில், தங்கி வாழவஞ்சி - அந்தரியாமியாக இருந்து இயக்கும் கொடியைப் போன்றவரும், ஆடல் விடையேறி - (சிற்பரவியோமத்தில்) அநவரத ஆனந்தத்தாண்டவமியற்றுபவரும் தருமவிடைமேல் வருபவருமாகிய சிவபெருமானது, பாகங் குலா மங்கை - இடப்பாகத்தில் இன்புடன் எழுந்தருளியுள்ளவரும், காளி நடம் ஆடி - பத்ரகாளியாக நின்று சிவமூர்த்திக்கு எதிரில் நிருத்தம் செய்தவரும், நாள் அன்பர் தாம் வந்து தொழுமாது - நாள்தோறும் மெய்யன்புடைய அடியார்கள் தமது சந்நிதிக்குவந்து வழிபட்டு வணங்கப்பெறுகின்றவரும், வாளம் முழுது ஆளும் - சக்ரவாளகிரியால் சூழப்பட்டுள்ள உலகமுழுவதையும் காத்து அருள் புரியும், ஓர் தண் துழாய் - ஒப்பற்றதும் குளிர்ச்சி பொருந்தியதுமாகிய துளபமாலையும், சோதிமணி - ஒளிவிடும்படியான இரத்தினமணிமாலையும், தங்கு மார்ப - பொருந்தியுள்ள திருமார்பையுடைய, மாலின் பி(ன்)னுள் - திருமாலுக்கு இளையவரும், இன் சொல் வாழும் உமை

மாதராள் - இனிய சொற்கள் நிலையாகவாழும் இன்பவடிவுடைய உமாதேவியாருமாகிய பரமேசுவரியாராது, மைந்தனே - திருக்குமாரரே !, எந்தை இளையோனே - எமது பிதாவாகிய எண்டோளீசாது இளைய புதல்வரே !, மாசு இல் அடியார்கள் - குற்றமில்லாத மெய்யடியார்கள், வாழ்கின்ற ஊர் தேடி சென்று - உறைகின்ற ஊருக்குத் தேடிச்சென்று, விளையாடி - ஆங்கு பற்பல அருள் திருவிளையாடல் களைச்செய்து, அங்ஙனே நின்று வாழும் மயில்வீரனே - அவ்வூரிலேயே நிலையாக எழுந்தருளியிருக்கும் மயில்மிசைவரும் வீரமுடையவரே !, செந்தில் வாழ்கின்ற பெருமாளே - திருச்செந்திலம்பதியில் (அடியார்பொருட்டு) எழுந்தருளியுள்ள பெருமையிற் சிறந்தவரே !, மூளும் வினைசேர - (தீயைப்போல்) மூண்டு பண்டைவினைகள் (பக்குவப்பட்டு) ஒருங்கே வந்துசேர, மேல்கொண்டிடா ஐந்துபூத - (அதனல்) உயர்ந்து எழுந்திராநின்ற மண் புனல் அனல் காற்று விண் என்ற ஐம்பெரும்பூதங்களின், வெகுவாய மாயங்கள் தாம் நெஞ்சில்மூடி - பற்பலவிதமான மாய்கைகள் அடியேனது உளத்தில் வந்து நன்கு மூடப்பெற்று, நெறி நீதி ஏதும் செயா - பத்திநெறிக்குரிய அறச்செயல் ஒன்றேனும் செய்யாமல், வஞ்சி அதிபார - பெண் காதலால் மிகுந்த பாரத்தைத்தாங்கி, மோகநினைவான போகம் செய்வேன் - ஆசை மனத்தணுகி அசுத்த போகத்தை அனுபவிப்பேன், அண்டர் தேட அரிது ஆய - தேவர்களும் தேடித் தெரிந்துகொள்வதற்கு அரியவாகிய, ஞேயங்களாய் நின்ற - மெய்யுணர்வால் நுணுகி அறியப்படுகின்றவைகளாய் விளங்கும், மூலபரயோகம் மேல்கொண்டிடா நின்று அது உளது ஆகி - முதன்மையான அனுபவயோகத்தில் முனைந்துநின்று அதனிடத்திலேயே (அசைவற்று) இருப்பதாகி, நாளும் அதிவேக கால்கொண்டு - நாள்தோறும் மிகவும் வேகமாக எழும் பிராணவாயுவைக்கொண்டு, தீ மண்ட - மூலக்கனல் மண்டி எழுந்திருக்க, வாசி அனலூடு போய் ஒன்றி - பிராணவாயுவானது (சுழுமுனை நாடியின் வழியே) அவ்வக்கினியுட் சென்று பொருந்தப் பெற்று, வானின்கண் - பிரமரந்திரத்திற்கு அப்பாலுள்ள ஆகாயத்தில், நாம மதிமீதில் ஊறுங் கலா இன்ப அமுதூறல் நாடி - புகழ்பெற்ற பூரணசந்திரனிடத்திலிருந்து பொழியும் அமிர்தகலையென்னும் இனிய அமிர்தப்பொழிவை நாடி, அதன்மீதுபோய் - அச்சந்திரமண்டிலத்தில் சென்று, நின்ற ஆனந்தமேலை வெளியேறி - நிலைபெற்றுள்ள ஆனந்தப்பெருவெளியின்மீது ஏறியமர்ந்து, நீ இன்றி நான் இன்றி

நாடி - நீ நான் என்ற பிரிவற்றிருக்கும் அத்துவித முத்தியை உணர்ந்து, இ(ன்)னும் வேறுதான் இன்றி வாழ்கின்றது ஒருநாளே - மேலும் பிறபொருள்களும் தோன்றாத மனமிறந்த சுகவாழ்வில் வாழ்கின்ற ஒரு நாள் அடியேனுக்கு உண்டாகுமா ?

பொழிப்புரை.

(திருப்பாற்கடலில் தோன்றி மாலயனாதிவானவர்களுக்கு துன்பத்தை நல்கிய) ஆலாகலவிடத்தை உண்டவரும், மதங்கமுனிவருக்கு (அவர் செய்த தவங் காரணமாக) புதல்வியாகத் திருவவதாரம்புரிந்தவரும், வேதங்களால் புகழப்படுகின்றவரும், பெரிய துர்க்கையாக அவதரித்தவரும், (மார்க்கண்டேயரைப் பற்ற) வந்த கூற்றுவன் உயிர்துறந்துவீழும்வண்ணம் திருவடியால் உதைத்து வீழ்த்தியவரும், காளியும், பிருதிவு, அப்பு, தேய்வு, வாய்வு, (சந்திர சூரியரால்) பிரகாசிக்கின்ற ஆகாயம் என்ற பஞ்சபூதங்களில் அந்தர்யாமியாக உறைபவரும், (ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு) ஆனந்தத்தாண்டவம்புரிபவரும் தருமவிடையின்மீது எழுந்தருளி வருபவருமாகிய சிவபிரானுடைய இடப்புறத்தில் குலவிக்கொண்டிருப்பவரும், பத்ரகாளியாகி சிவமூர்த்திக்கு எதிராக நின்று நிருத்தஞ்செய்தவரும், நாள்தோறும் அன்பர்களால் தொழப்பெற்றவரும், சக்ரவாளகிரி சூழ்ந்த உலகமுழுவதையும் காப்பவரும் ஒப்பற்றதும் குளிர்ச்சியுடையதுமாகிய துளபமாலையைத் தரித்துக்கொண்டிருப்பவரும், ஒளிவீசுகின்ற இரத்தினமணி மாலைகள் தங்கியுள்ள திருமார்பையுடையவருமாகிய திருமாலினது சகோதரியும், இனிய மொழிகளுக்கு உறைவிடமாகிய உமாதேவியும் ஆகிய சிவகாமசுந்தரியாரது திருக்குமாரரே! உலகங்களுக்குத் தந்தையாகிய சிவபெருமானுக்கு இளைய புதல்வரே! குற்றமில்லாத மெய்யடியார்கள் வசிக்கின்ற ஊருக்கு அவர்களைத் தேடிச் சென்று அவ்வடியாருடன் பற்பல அற்புத அருட்டிருவிளையாடல்களைப்புரிந்து அவ்வூரிலேயே நிலைத்து இருந்து வாழுகின்ற மயில் வீரரே! திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள பெருமாளே! (பயனைத் தருவதற்குப் பக்குவப்பட்டு தீயைப்போல்) மூண்டு பண்டை வினைகள் ஒருங்கேவந்து சேர, அதனால் வலிந்து எழுந்திராநின்ற ஐம்பெரும்பூதங்களின் அநேகவிதமான மாய்கைகள் அடியேனுடைய உள்ளத்தில்வந்து நன்குமூடப்பெற்று, செந்நெறிக்குரிய அறச்செயல்களில் ஒன்றேனும் செய்யாமல், பெண்ணாசையால் மிக்க பாரத்தைத்

தாங்கி, ஆசைமனத்தனாகி அற்பசுகத்தை அனுபவிக்கின்றேன்; இத்தகைய அடியேன், தேவர்களுந் தேடி யுணர்தற்கரியவும், மெய்யறிவால் உணர்தற்பாலவையுமாய் விளங்கும் முதன்மையாகிய அனுபவ சிவயோகத்தில் சிறந்துநின்று அசைவற்றிருப்பதாகி, நாள்தோறும் மிக வேகமாகவரும் பிராணவாயுவைக்கொண்டு மூலக்கனலை எழுப்பி, (சுழுமுனை நாடிவழியே) சென்று, அந்த சந்திரமண்டலத்திலுள்ள பூரணசந்திரன் பொழியும் அமிர்த இன்பகலையின் பொழிவை நாடி, அவ்வமிர்தமண்டலமாகிய மேலைவெளியிலேறி அங்கு "நீ நான்" என்ற வேற்றுமையின்றி அத்துவிதமாகக்கலந்து இருந்து, மேலும் பிறபொருளும் தோன்றாவண்ணம் பரமசுகப்பெருவாழ்வில் வாழும் நாள் ஒன்று (அடியேனுக்கு) உண்டோ?

விரிவுரை.

மூளும் வினை:—

முற்பிறப்புகளில் செய்த பழைய வினைகள் பக்குவப்படாமலிருந்து உரியகாலத்தில் அனுபவிப்பதற்கு பரிபக்குவமடைந்து, மிகவும் வேகமாகத்தன்னையுடையவனிடம் விரைந்துவந்துசேரும். அவ்வினையானது தீ விரைந்து மூண்டு எரிப்பதுபோல்மூண்டு உடையானை எரிக்கும். அவன் எவ்வுழியிருப்பினும் அவனைத் தேடிவந்தடையும். "பலபசுக்களுக்கு இடையில் ஒருகன்றைவிட்டால் அது எப்படி தன் தாய்ப்பசுவை விரைந்து நாடியடையுமோ அப்படியே பழவினையும் தன்னைச்செய்தவனைத் தவறாமல் அடையும்" என்றார் நாலடியார்.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

"பிறப்பதற்கு முன்செய்த தீவினையோ
இங்ஙனே வந்து மூண்டதுவே"
—பட்டினத்தார்.

ஞேயங்கள்:—

அறியப்படு பொருள்கள்.

பரயோக:—

பொறிபுலன்களின் சேட்டைகளற்று சமாதி மனோலயமுற்று ஜீவபாவமொழிந்து வெறுந்தானாய் நிலைத்துநிற்கின்ற நிலை.

கால்கொண்டு தீமண்ட :—

அவமே கழிகின்ற பிராணவாயுவை கழியவிடாமல், அஜபா மந்திரத்துடன் கும்பகம்புரியில் மூலக்கனலை எழுப்பிக்கொண்டு அடைபட்டிருக்கின்ற சுழுமுனைநாடிவழியே அவ்வாயு செல்லும்.

" சூலம் பெற வோடிய வாயுவை
மூலந் திகழ் தூண்வழியே அள விடவோடி"
— திருப்புகழ்.

"நாலுசதுரத்த பஞ்சரை மூலகமலத்தி லங்கியை
நாடியின டத்தி மந்திர பந்தியாலே"
— திருப்புகழ்.

மதிமீதிலூறுங் கலா இன்ப அமுதூறல் :—

சந்திரமண்டலத்தில் சென்று அங்கு சதா ஊறுகின்ற அமிர்த தாரையை சகோரபட்சியைப்போல் பானஞ்செய்து பசிதாகமற்று சித்திர தீபம்போல் சிவயோகிகள் அசைவற்றிருப்பர்.

ஆனந்தமேலே வெளியேறி :—

சிறிதுகூடத் துன்பமேயில்லாத தூய வெளியில் சென்றவர் இன்பமயமாக இருப்பர்.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத்துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பியவா ! முகமாறுடைத் தேசிகனே
— அலங்காரம்.

நீயின்றி நானின்றி :—

ஜீவான்மாவானது இருவினையொப்பு மலபரிபாகமுற்றபோது அருள்பதிந்து சிவத்தோடு இரண்டறக்கலந்து ஏகப்பெருவெருவெளியில் கரைகடந்த இன்பப்பெருவெள்ளத்தில் அழுந்தி ஏகசொரூபமாய் நிற்கும். அந்நிலையில் சிவமும் ஜீவனும் வேற்றுமையின்றிக் கதிரொளியும் கண்ணொளியுங் கலந்ததுபோல் கலந்து விளங்கும்.

"இருவினையும் மலமுமற இறவியோடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருள்"
— திருப்புகழ்.

ஜீவன் சிவனுகிப் பூரணமுற்ற அந்நிலையை சொல்லாலும் எழுத்தாலும் விளக்கமுடியாது; அநுபவித்துணரற்பாலது. அந்நிலையையடைந்த அனுபவ மெய்ஞ்ஞானப் பெரியார்கள் கூறிய அருட்பாக்களை உற்றுநோக்குக

"நாமொழிந்து சிவமானவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

—திருவாசகம்.

சீவ னெனச் சிவனென்ன வேறில்லை
சீவனுர் சிவனுரை யறிகிலர்
சீவனுர் சிவனுரை யறிந்த பின்
சீவனுர் சிவ னுயிட் டிருப்பரே

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலா தற்பதம்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே

—திருமந்திரம்.

அதுவிது வென்றும் அவன் நானே என்றும்
அதுநீயே யாகின்ரு யென்றும்—அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தா ரெல்லாம் இரண்டாக
ஒன்ருகச் சொல்வாரோ வுற்று

—திருக்களிற்றுபடியார்.

நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவே சும்மா
தானமரும் நிலையெனவே சத்தியம் சத்தியம்

—தாயுமானுர்.

காளவிடமுணி :—

சிவமும் சத்தியும் பொன்னும் ஒளியும்போல், மலரும் மணமும் போல் தாதான்மியமாதலால் விடமுண்டதை சத்தியின்மேல் ஏற்றிக் கூறினுர்.

மாதங்கி :—

மதங்கரிஷி சத்தியை மகளாகப் பெறவேண்டிப் பெருந் தவமிருந்து அத்தவத்தின் பயனுக அம்பிகையை மகளாகப் பெற்ருர்; அதனுல் அம்பிகைக்கு இப்பெயருண்டாயிற்று.

வேதஞ் சொல்:—

வேதங்களைத் திருவாய்மலர்ந்தவர் என்றும் பொருள்படும்,

பாதங்களால் வந்த காலன்விழ மோது சாமுண்டி:—

சிவபத்தராகிய மார்க்கண்டேயரைப் பற்றவந்த இயமனை முக்கட் பெருமான் சத்தியின்பாகமாகிய இடத்திருவடியால் உதைத்த குறிப்பை யுணர்த்துகிறார்.

பாரம்போ . . . . வானமேதங்கிவாழ்வஞ்சி.—

பஞ்சபூதங்களில் நிறைந்து விளங்குவது சத்தியேயாம்; இதனால் யாவும் சத்திமயமே எனப்புலப்படுத்துகின்றார்.

மாசிலடியார்கள் :—

நெஞ்சிற் கரவுடையதாய், வெளித்தோற்றத்தில் அடியார்போல் நடிக்குங் குற்றமில்லாத மெய்யடியார்கள்.

வழ்கின்றவூர் . . . . அங்ஙனே நின்று :—

அத்தகைய மெய்த்தொழும்பர் உறையும் உறைவிடத்திற்கு மறைக்கும் எட்டாத மயூரவாகனப்பெருமாள் தாமேவலிந்து தேடிச் சென்று, அரிதிற் றவம்புரிவார்க்குங்காட்டாத தமது அருள் திருமேனி புலனுமாறு காட்டி, அவ்வடியாருடன் கலந்து பற்பல அற்புத அருள்விளையாடல்களைப் புரிந்து, அவ்வடியருடனேயே புறத்தும் அகத்தும் பிரியாதுறைவார்:

"இமைப்போதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க"

—மணிவாசகனார்.

திருமாலொடு திசைமுகனும் தேடித்தேடித் தெரிசிக்கமுடியாத முழுமுதற்கடவுள் அடியாரைத்தேடிவருவது அவரது திருவருள் பெருக்கை யுணர்த்துகிறது. அளப்பரிய அருட்கடலாகிய அப்பரமபிதா தன்னை உள்ளபடியே நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழும் நல்லன்பரைத் தேடிவந்து அவருடன் வாழ்கின்றான் என்றால் அப்பிதாவின் கருணையை என்னென்று வியப்பது?

கருத்துரை.

உமாதேவியாரது திருக்குமாரரே! சிவ புதல்வரே! அடியாருடன் வாழும் மயில்வீரரே! செந்திலாதிப! பண்டைவினையால் மாய்கையில் மூழ்கி அழியும் அடியேன், சிவயோக சாதனையில் நின்று, மூலக்கனலை எழுப்பி, அமிர்தபானஞ்செய்து, ஆனந்தமேலைப் பெருவெளியிற்சென்று, அங்கு நீ நான் என்ற வேற்றுமையின்றி அத்துவிதமுத்தியையடைந்து சிவானந்த பெருவாழ்வில் சிவபோகத்தைத் துய்க்கும் ஒருநாள் அடியேனுக்கு உண்டோ?

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(77-வது பக்கத் தொடர்ச்சி)

नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादि जननम् ।
सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरी-
विहारासक्तं चेद्धृदयमिह किं तेन वपुषा ॥ १० ॥

(10) நரத்வம் தே3வத்வம் நக3வனம்ருக3த்வம் மசகதா

பசுத்வம் கீடத்வம் ப4வது விஹக3த்வாதி3 ஜனனம் ।

ஸதா3 த்வத்பாதா3ப்3ஜ ஸ்மரண பரமானந்த3 லஹரீ-

விஹாரா ஸக்தம் சேத்4ருதயமிஹ கிம் தேன வபுஷா ॥

பதவுரை.

நரத்வம் - மனிதத்தன்மையும்,
தேவத்வம் - தேவத்தன்மையும்,
நகவனம்ருகத்வம் - மலை காடு மிருகத் தன்மையும்,
மசகதா - கொசுவாயிருத்தலும்,
பசுத்வம் - பசுவாயிருத்தலும்,
கீடத்வம் - புழுவாயிருத்தலும்,
விஹகத்வாதி - பறவையின் தன்மை முதலியதான,
ஜனனம் - பிறப்பானது,
பவது - உண்டாகட்டும்,
இஹ - இத்தகைய பிறப்புகளில் எப்பிறப்புகளிலும்,

ஸதா - எப்பொழுதும்,
த்வத்பாதாப்ஜ ஸ்மரண பரமானந்த லஹரீ விஹாராஸக்தம்சேத்-தேவரீருடைய தாமரைமலரையொத்த திருவடிகளை நினைத்ததாலாகிற மிகுந்த இன்பத்தின் பிரவாகத்தில் விளையாடுவதில் ஆவலுடையதாக இருந்தால்,
தேன - அந்த
வபுஷா - சரீரத்தினால்
கிம் - என்ன கெடுதி உண்டாகிறது? (ஒன்றுமில்லை)

பொழிப்புரை.

மனிதன், தேவன், மலை, வனம், விலங்கு, பறவை, கொசு, பசு புழு முதலிய பல பிறவிகளில் பூர்வவினைப்படி எப்பிறவியை யடைந்தாலும், அடியேனுடைய மனம்மாத்திரம் எப்பொழுதும், தேவரீருடைய திருவடித்தாமரைகளைத் தியானிப்பதாலுண்டாகிற பரமானந்த வெள்ளத்தில் மூழ்கிக் களிக்கப்பெறுமாயின் மேற்கூறிய உடல்களால் அடியேனுக்கு நேரும் குறை யாது? எப்பிறப்பானாலும் குற்றமில்லை.

எந்தப்பிறப்பிற் பிறந்தாலும் இறைவன் திருவடித்தியானம் மாறாமலிருத்தல்வேண்டும். இறைவனை நினைக்கும் பேற்றையுடைய பிறப்பே உயர்ந்தது.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

—அப்பர் தமிழ்மறை.

எழுவகைப் பிறவிகளு ளெப்பிறவி யெய்துகினும்
எய்துக . . . . .
இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டு மரசே

— திருவருட்பா.

वटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शंभो भवसि भवभारं च वहसि ॥ ११ ॥

(11) வடுர்வா கே^{3}ஹி வா யதிரபி ஜடீ வா ததி^{3}தரோ
நரோ வா ய: கச்சித்^{3}ப^{4}வது ப^{4}வ கிம் தேன ப^{4}வதி ।
யதீ^{3}யம் ஹ்ருத்பத்^{3}மம் யதி^{3} பவத^{3}தீ^{4}னம் பசுபதே
ததீ^{3} யஸ்த்வம் சம்போ^{4} ப^{4}வஸி ப^{4}வபா^{4}ரம் ச வஹஸி ||

பதவுரை.

பவ	- சிவபெருமானே,
வடுர்வா	- பிரமசரியமானாலும்,
கேஹீவ	- கிரகஸ்தனானாலும்,
யதிரபி	- ஸன்னியாசியானாலும்,
ஜடீவா	- ஜடையை யுடையவ (வானப்பிரஸ்த) னானாலும்,
ததிதர:	- அவர்களல்லாத,
ய: கச்சித்ரேவா	- எந்த ஒருமனிதனானாலும்,
பவது	- ஆகட்டும்,
தேன	- அதனால்,
கிம்	- என்ன கெடுதி,
பவதி	- உண்டாகிறது?
யதி	- ஆனால்,
பசுபதே	- உயிர்களுக்குத் தலைவரே!
யதீயம்	- எவனுடையதான
ஹ்ருத்பத்மம்	- மனதாகிய தாமரைப் பூவானது,
பவததீனம்	- தேவரீருக்கு ஸ்வாதீனமாயிருக்கிறதோ?
சம்போ	- சுககாரணனே!
த்வம்	- தேவரீர்,
ததீயம்	- அவனைச் சேர்ந்தவனாக,
பவஸி	- ஆகின்றீர்,
பவபாரம் ச	- சம்சாரமாகிய சுமையையும்,
வஹஸி	- சுமக்கிறீர்.

பொழிப்புரை.

பிரமசர்ய, கிருகஸ்த, வானப்ரஸ்த, சன்யாச என்னும் ஆச்சிரமங்களில் எந்த ஆச்சிரமத்திலிருந்தால்தான் என்ன? ஆச்சிரமத்தாலென்னபயன்? பசுபதியாகிய தேவரீரது திருவடியில் எவன் மனத்தை வைக்கிறானோ அவனுக்கே தேவரீர் சுவாதீனமாய் அவனுடைய சம்சாரத்தையுந் தாங்குகிறீர்.

இறைவனது திருவடித்தியானமில்லாத நிலைகள் எதுவாயினும் பயனில்லை; இறைவனது திருவடியில் மனத்தை வைப்பவனிடம் மறைக்குமெட்டாத அத் தனிப்பெருந்தலைவன் தானேவந்து அவர்களுக்கு எளியனாகிவிடுகிறான்; அவனுடைய பாரத்தையும் தாங்குகிறான்.

கருமமா தவஞ் செபஞ் சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசமதாகிப் பொருந்திடோம் புரையொன் றின்றி
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போம்
உரைசெய்வோ மவர்முன்னெய்தி யவருளத் துறைவோமென்றும்.

—வாயுசங்கிதை.

गुहायां गेहे वा बहिरपि वने वाद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तःकरणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ॥ १२ ॥

(12) கு[3]ஹாயாம் கே[3]ஹே வா ப[3]ஹிரபி வனே வாத்[4]ரி சி[2]கரே

ஜலே வா வஹ்னௌவா வஸது வஸதே: கிம் வத[3] பலம் |

ஸ[3]தா யஸ்யைவாந்த:கரணமபி சம்போ[4] தவ பதே[3]

ஸ்தி[2]தம் சேத்[3]யோ கோSசௌ ஸ ச பரமயோகீ ஸ ச ஸுகீ[2] ||

பதவுரை.

குஹாயாம் - மலையினுடைய குகையிலாவது,
கேஹேவா - வீட்டிலாவது,
பஹிரபி - வெளியிலாவது,
வனேவா - காட்டிலாவது,
அத்ரி சிகரே - மலையின் உச்சியிலாவது,
ஜலேவா - தண்ணீரிலாவது,
வஹ்னௌவா - நெருப்பிலாவது எந்த மனிதனும்,
வஸது - வசிக்கட்டும்,
வஸதே: - வசித்தலால்,
கிம் - என்ன,
பலம் - பயன்,
வத - இதை நீர்சொல்லும்.
சேத் - அதனுல்,
சம்போ - சுககாரணனே !
யஸ்ய - எந்த புருஷனுடைய,
அந்த:கரணமபி - மனதானது,
ஸதா - எப்பொழுதும்,
தவ - தேவரீருடைய,
பத ஏவ - திருவடியிலேயே,
ஸ்திதம் - நிலைத்தலோ,
அஸௌ - அதுதான்,
யோக: - யோகம்
ஸச - அவன்தான்,
பரமயோகீ - மேலான யோகத்தையுடையவன்,
ஸச - அவன்தான்,
ஸுகீ - சுகத்லை யுடையவன் (மோட்சத்திற்கு உரியவன்).

பொழிப்புரை.

மலைக்குகையிலோ, வீட்டிலோ, வெளிகளிலோ, காட்டிலோ, மலையினுச்சியிலோ, நீரிலோ, நெருப்பிலோ, எவ்விடத்திலிருந்துதான் என்ன பயன் ? எவருடைய மனம் எப்போதும் ஏ சம்போ ! தேவரீருடைய திருவடித்தாமரையில் பதிந்திருக்கின்றதோ அவரே மகா யோகிகளும் இன்பத்தையுடையவருமாவார்.

இறைவனுடைய தியானமில்லாமறப்படிக்கு எவ்விடத்திலிருப்பதாலும் பயனில்லை; சிவசிந்தனேயே மேலானதாம்; அதனையுடையவரே யோகிகள்; அவருக்கு பரமசுகமுண்டாகும்.

மலைமுழையி னுற்ருலென் மாமருந் துண்டாலென்
கலைமுழுதுங் கற்ருலென் காணுர்—இலைநிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரு ரையனிரு
கால்பிடித்தார் காண்பார்கதி.

—சிதம்பரசுவாமிகள்.

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(82-வது பக்கத் தொடர்ச்சி)

செவ்வேட்பெருமான் சேனையுடன் செல்லும் நெறியிலே, தாரகாசுரனுக்கு உறையுளும், மாயைகளுக்கு இருப்பிடமும், தன்னையடைந்தோரை வருத்துங் கொடுமையுடையதுமாகிய கிரௌஞ்சமலை சேர்ந்தது. அதனைக் கண்டவுடனே தேவர்கள் நடுநடுங்கினார்கள்; இந்திரனும் கலங்கிநின்றான். அப்பொழுது நாரதர்வந்து, குகப்பெருமானைப்பணிந்து, கைகுவித்துநின்று, "எம்பெருமானே! கிரௌஞ்சமலை என்பது இதுவே; அந்தணர், அருந்தவர் முதலியோர் இவ்வழியிற் செல்லுங்கால் வழிபோற்காட்டி மாயைசெய்து கொல்லுந் தொழிலுடையது. அகத்தியமுனிவரது சாபத்தால் இவ்வடிவமாய் நிற்கிறது. இம்மலையைச்சார்ந்துள்ள மாயமாபுரியிலே, சூரனுக்கு இளவலும், யானைமுகத்தையுடையவனும், போரிலே விட்டுணுமூர்த்தியை வென்று அவர் சக்கராயுதத்தை மார்ப்பதக்கமாகக் கொண்டவனுமாகிய தாரகன் வாழ்கின்றான். இவனைக் கொல்வீராயின் சூரனைக் கொல்வது மிக எளிது" என்று விண்ணப்பஞ்செய்தார். முருகவேள் "அவனை இங்கு கொல்வோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே இந்திரன்முதலிய இமையவர்கள், "இன்றே தாரகன் இறந்தான்" என்று மனக்கவலை நீங்கி மகிழ்ந்தார்கள்.

அறுமுகத்தண்ணல் அருகில்நின்ற வீரவாகுதேவரை நோக்கி, "இளையோய்! இந்தக் கிரௌஞ்சமலையின் பாங்கரிருக்கும் மாயபுரியிலே தாரகன் அசுரர்களுடன் இருக்கின்றான்; நீ நினது தம்பியர்களாகிய இலக்கத்தெண்மர்களோடும், ஆயிரம்வெள்ளம் பூதர்களோடும் போய், தாரகனை எதிர்த்து அவனுடைய சேனைகளைக் கொல்லக்கடவாய்; தாரகனையும் வெல்லக்கடவாய்; அவனைக்கொல்ல நாம் வருவோம்" என்று பணித்தருளினார். வீரவாகுதேவர் பெருமானைப் பணிந்தெழுந்து கும்பிட்டு நின்றார். முருகவேள், வீரர்களுக்கும் பூதர்களுக்கும் அவ்வாறே பணித்தருளினார். குமாரமூர்த்தி, தேவதச்சனை நோக்கி, "வீரவாகுதேவர் முதலிய யாவருக்கும் நீ பல தேர்களைச் செய்யக்கடவாய்" என்று பணித்தருளினார். தேவதச்

சன் ஒரு கணப்பொழுதில் குதிரைகள், பூதங்கள் பூட்டிய பல தேர்களைச்செய்தான். அவற்றை எம்பெருமான் வீரவாகு முதலியோருக்குத் தந்தருளினார். வீரவாகுதேவர் முதலியோர்கள் பெருமானை மும்முறை வலம்வந்து வணங்கி விடைபெற்றுத் தேரின்கணூர்ந்து சென்றார்கள். நானாவிதமானவாத்தியங்கள் முழங்க வீரவாகுதேவர் ஆயிரம்வெள்ளம் பூதங்களுக்கும், பூதசேனாதிபதிகளுக்கும் இலக்கத்தெட்டு வீரர்களுக்கும் நாயகராய் சென்றார். மாயபுரியைச்சேர்ந்தவுடன் பூதர்கள்போய் நகரத்தினுள்ளே புகுந்து, எதிர்த்த அசுரர்களோடு போர்செய்துகொண்டு நின்றார்கள். அதுகண்ட தூதர்கள் ஓடி, தாரகனை வணங்கிநின்று " அரசனே ! " சூரபன்மன் தேவர்களை இட்ட சிறையைநீக்கும்பொருட்டு, சிவபெருமான் ஒரு குமாரனைப் பெற்றருளினார்; அக்குமாரசுவாமி அசுரர்களைக் கொன்றுவிடுவார்" என்று ஆகாயத்திலே செல்லும் தேவர்கள் கூறக்கேட்டேம். அதனை நாங்கள் பொருள்படுத்தாதிருந்தேம்; இப்பொழுது அவர்கள் கூறியவாறே இரண்டாயிரம் வெள்ளம் பூதர்கள் சூழக் கந்தசுவாமிவந்தார்; அப்படையின் தூசியே நமது நகரத்தை அழிக்கிறது" என்றார்கள்.

தாரகன் கேட்டு வடவைத்தீயைப்போற் கொதித்து அண்டங்கள் நடுங்க எழுந்து, " உலர்ந்த புற்காட்டை அனற்புகுந்தழிப்பது போல் அப்படைகளை அழிப்பேம்; உழுந்துருளுமுன் நமது படைகளைத் திரட்டுங்கள் " என்றான். அப்பணியைச்செய்யத் தூதர்கள் செல்லலும், பரிசனரை நோக்கி, " நம் தேரைக் கொணர்மின் " என்றான். அவர்கள் அவ்வாறே கொணர்ந்த தேர்மீது ஏறி, மந்திரிகள் துதிக்க, சாமரம் இரட்ட, வெண்கொற்றக்கொடைபிடிக்க, வலம்புரி சங்கங்களை ஒலிக்கத் தாரகன் சென்றான். மகாமேருமலையைப் போன்ற ஒரு பெரிய வயிரத்தண்டமும் பல படைக்கலங்களும் பல சிங்கங்களால் இழுக்கப்படும் தேர்மீது சென்றன. எழுகடல்களைப் போல் அசுரசேனைகள் சூழ்ந்துசென்றன. அதுகண்ட பூதர்கள் ஆரவாரித்து எதிர்ந்து வேற்கரத்தண்ணலாது விரைமலரடியைச் சிந்தித்து, குன்றுகளையும், மரங்களையும், சூலங்களையும், தண்டங்களையும், அசுரர்கள்மேல் வீசினார்கள்; அசுரர்கள் அம்புகளையும் வேல்களையும் சக்கரங்களையும் எதிர்வீசிப் போர்செய்தார்கள். இவ்வாறு இருதிறச் சேனைகளும் பொரும்பொழுது, உதிரநதி பெருக, சிரங்களும் கரங்களும் துள்ள, குடர்கள் சிந்த, கவந்தங்கள் நிருத்தமிட, அசுரர்கள் பலர் இறந்தனர்; பூதர்களுஞ் சிலர் இறந்தனர்.

BESANT

பூதர்களாலே தன் சேனை மாளக்கண்ட தாரகன் வெகுண்டு தேரினின்றும் பூமியிற்குதித்து ஒரு தண்டத்தை எடுத்து பூதர்களைக் கொன்று, அண்டங்கள் அதிரும்படி ஆர்த்து, கால்களால் உழக்கிச் சென்றான். தாரகனால் பூதர்கள் அழிந்ததைக்கண்ட பூதசேனாதிபதிகள் தாரகனை எதிர்க்கும் வன்மையின்றித் தளர்ந்து ஓடினார்கள். அது கண்ட இலக்க வீரர்கள் சினந்து பற்பல வாத்தியங்கள் ஒலிக்க, வில் வளைத்து கணைகளைத்தொடுத்துத், தாரகனை வளைந்தார்கள். அவர்கள் விடுத்த கணைகள் தாரகனுடைய உடலைப்பிளந்தில; ஒரு சிறிதும் புண் படுத்தில; வரியவன் செல்வரிடம் சொல்லும் சொற்களைப்போல் மீண்டன; அம்புகள் தாரகன் மார்பிற்பட்டு, கன்மலைமேல் சிதறும் கன்மாரிபோல் பழுதுபட்டன. வீரர்கள் கண்டுவெகுண்டு தெய்வப்படைகலங்களைச் செலுத்த, அவைகளும் துகழ்பட்டன. தேவர்கள் அதனைக்கண்டு கை பிசைந்திரங்கினார்கள். அப்பொழுது தாரகன் தன் வைரத்தண்டத்தைச் சுழற்றி, இலக்கம் வீரர்களின் தேர்களையெல்லாம் தும்பிக்கையை நீட்டி எடுத்து கடலில் வில்லோடு விழும்வண்ணம் வீசினான். கடலில் விழுந்தவீரர்கள் வில்லுடன் எழுந்து ஒரு புறம் ஒதுங்கிச்சென்றார்கள்.

வீரகேசரி அதுகண்டு கோபத்தோடு சென்று குமாரக்கடவுளை மனத்திற் சிந்தித்து வில்லைவளைத்து, நூறுகணைகளைவிடுத்து தாரகனுடைய மகுடத்தைத்தள்ளி, கடலும் நாணுமாறு ஆரவாரித்தார். தேவர்கள் அவர்மீது பூமாரி பொழிந்தார்கள். தாரகன் அதுகண்டு நாணி, தன்கை தண்டத்தை வீரகேசரிமீதெறிந்துவிட்டுத் தன் தேர் மீது ஏறி ஒரு மகுடத்தைத் தரித்துக்கொண்டான். தாரகன் எறிந்த தண்டம் தம் மார்பின்மேற்படுதலும், வீரகேசரி மயங்கிவீழ்ந்தார். வீரவாகுதேவர் அதுகண்டு வெகுண்டு தாரகன் எதிர்சென்று பற்பல கணைகளைத்தொடுத்து தாரகன் உடலைப் புண்படுத்தினார் தாரகனும் வீரவாகுதேவர்மீது சரமழையைப் பொழிந்தான். வீரவாகுதேவர் பதினான்கு பாணத்தைவிடுத்து அவன்வில்லைத்துணித்தார். தாரகன் "இனி நீ இறந்தாய்" என்று சொல்லி ஒரு சூலத்தை விடுத்தான். அச்சூலம் தம்மார்பிற்படுதலும் வீரவாகுதேவர் மயங்கிநிற்ப, தாரகன் இடிபோல் ஆர்த்தான். வீரவாகுதேவருடைய தம்பியார் எழுவர்களும் தாரகனை எதிர்ந்து தோற்றார்கள்.

அதுகண்ட வீரவாகுதேவர் வெகுண்டு ஒரு வில்லை யெடுத்து வளைத்து நாணொலிசெய்தார். அப்பொழுது மலைகள் சுழன்றன, அசு

ரர்கள் செவிகளைப்பொத்திக்கொண்டு ஓடியொளிந்தார்கள். வீரவாகு தேவர் தாரகனை நோக்கி, "வீரர்களையும் பூதர்களையும் வென்றோம் என்று எண்ணற்க; நின்னை யான் விரைந்துகொல்வேன்" என்றார், தாரகன் "திருமால் விடுத்த திகிரியை என் மார்பில் பதக்கமாகத் தரித்துளேன்; என்னைக்கொல்வேன் என்றனை; சிங்கத்தை நரிவெல்லுமோ? வீரர்களும் அயர்ந்தார்கள்; பூதப்படைகள் மாய்ந்தன; வீரம்பேசும் நீயும் சிறிது நேரத்தில் அழியப்போகின்றாய்" என்றான். அப்பொழுது வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களைத்தொடுக்க தாரகன் தன்வில்லைவளைத்து ஆயிரம்பாணங்களை எதிர்தூண்டி, அவற்றைப் பொடியாக்கி, வேறு நூறு பாணங்களைச் செலுத்தினன். வீரவாகு தேவரும் நூறு கணைகளை விடுத்து அவற்றை மாற்றினர். தாரகன் அதுகண்டு, "வில்வன்மையில் இணையில்லாத இவ்வீரனைத் தெய்வப் படைக்கலங்களாலே வெல்வேன்" என்று எண்ணி அக்கினிக்கணையைவிட, வீரவாகுதேவரும் அக்கினிக்கணையை ஏவி அதனை யழித்தார்; தாரகன் வருணப்படைக்கலத்தை ஏவ, வீரவாகுதேவரும் வருணப்படைக்கலத்தைச் செலுத்தி, அதனைத்துண்டித்தார். தாரகன் சூரியன் படைக்கலத்தைவிட, வீரவாகுதேவரும் அப்படைக்கலத்தை விடுத்து அதனைத்துணித்தார். தாரகன் வாயுவத்திரத்தையேவ வீரவாகுதேவரும் வாயுவத்திரத்தைச் செலுத்தி அதனைப்பிளந்தார். தாரகன் பிரமாத்திரத்தையேவ, வீரவாகுதேவரும் பிரமாத்திரத்தையேவி அதனைத்தகர்த்தார்

தாரகன் இவற்றைக்கண்டு வியப்புற்று, "நான்விடுத்த தேவப் படைக்கலங்கள் எல்லாவற்றையும் இவ்வீரன் வென்றுவிட்டான்; இனி இவனை மாயையால் வெல்வேன்" என்று எண்ணி, மாயாமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எண்ணில்லாத வடிவங்களைத் தாங்கி கணக்கில்லாத கணைகளைச்சிந்தினன். இருட்படலம் எங்கும் பரந்தது போல் அவனொருவனே எங்குமாய் நின்று கடும்போர்செய்ய, இமையவர்கள் அதுகண்டு ஏங்கினர்கள். முன்னரே தூரத்தில் ஓடிப்போயிருந்த பூதர்கள் பின்னும் அஞ்சி ஓடினர்கள்; போர்செய்து இளைத்த வீரர்களும் வெகுண்டு நின்றாகள். அசுரர்கள் நகைத்து ஆர்த்தார்கள். தாரகன்செய்யும் மாயப்போரையும், அதுகண்டு அனைவரும் அஞ்சுதலையும் வீரவாகுதேவர் அனற்பொறிசிந்த நோக்கி, ஊழிகாலத்தெழும் பெருந்தீயைப்போல் வெகுண்டு, வீரபத்திரப்படைக்கலத்தை விடும்வண்ணம் எடுத்தார்; எடுத்தலும் சூரியன்முன் இருள்போல்

தாரகனுடைய மாயைமுற்றும் அப்பொழுதே அழிந்தது. தனித்து நின்ற தாரகன் வீரவாகுதேவரைப் பின்பு மாயையால் வெல்லும் பிறிதோர் வஞ்சனையை எண்ணி, தன் தேரைவிட்டுக்குதித்து விரைந்து புறங்கொடுத் தோடினான். வீரவாகுதேவர், "தோற்றோடினவன் மேலே படைக்கலம் விடுத்தல் வீரமன்று" என்று எண்ணி, அவ்வீரபத்திரக்கணையைத் தூணியுள்இட்டு, "வலியிழந்தோடிய தாரகன்பின் விரைந்துசென்று, அவனைப்பிடித்துப் புயத்தைக் கயிற்றாற்கட்டி எம்பெருமான் திருமுன் கொண்டுபோய்விடுவேன்" என்று நினைந்து, ஆறுமுகப்பரஞ்சுடாது அடிமலரைச் சிந்தித்து அலைகடலைப்போல் ஆரவாரித்து, அவனை வைது கொண்டு தாரகனைத்தொடர்ந்து ஓடினார். ஓடி அணுகலும், தாரகன் மாயைக்கு உறைவிடமாகிய கிரௌஞ்சமலையின் குகையொன்றினுள்ளே சென்று ஒளித்தான். அவன் சென்ற குகையினுள்ளே வீரவாகுதேவர் புகுதலும், அம்மலைமுற்றும் சூரியன்செல்லாத இருள்நிலம்போல் இருந்தது. வீரவாகுதேவர் திருவடிகளினாலே தடவிக்கொண்டு மெல்லநடந்து தாரகனைக்காணாது அம்மலையின் மாய்கையால் மீளும் வழியையுங்காணாது மிகவும்வெகுண்டு "இம்மலையின் மாயை இது" என்று சிந்தித்துநின்றார். அப்பொழுது அசுரனாகிய கிரௌஞ்சமலை அதுகண்டு, "இது நல்லதருணமென்று" எண்ணி, வீரவாகுதேவருடைய அறிவைமயக்க, அவர்மயங்கி முன்னையுணர்ச்சி முழுதும் இழந்து, துயின்றார்.

இவ்வாறு அம்மலையினுள் வீரவாகுதேவர் மயங்கித்துயிறலும், அவருடைய அன்புடைத் தம்பியர்கள் இலக்கத்தெண்பரும், பூதசேனாதிபதிகளும் மிகவும் மெலிந்து விம்மிச் சிறகொடிந்த பறவைபோல்வாடி, "நமது தாயகமாகிய நாயகர், தோற்றோடிய தாரகனைத் தொடர்ந்துசென்றார்; இன்னும் மீண்டிலர்; அவனோடு மலையினுள்ளே நின்று போர்செய்கின்றார்போலும்; நாமும் அங்கே போவோம்" என்று நினைந்து அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு விரைந்துசென்று வீரவாகுதேவர் புகுந்த குகையினுள்ளே புகுந்தார்கள். கிரௌஞ்சமலை வீரவாகுதேவரை மயக்கியதைப்போலவே, எண்ணில்லாத மாயத்தைச்செய்ய, அவர்கள் அனைவரும் அறிவிழந்து மயங்கித்துயின்றார்கள். தாரகன்வந்து அதனை நோக்கி "நம்மாயையாலே இவர்கள் எல்லோரும் இறந்தார்கள்" என்று மகிழ்ந்து மலையின்மேல் எழுந்தான்.

வானத்தில் நின்ற வானவர்கள் இவற்றையெல்லாங்கண்டு கண்ணீர்வார அழுதுகலங்கி, உரைதழறி உடல்பதைத்து உளம் நடுங்கி

ஓடினூர்கள். பூதப்படைகள், தலைவரின்மையால் அச்சமுற்றன; மலை மீதெழுந்த தாரகன் ஒரு தேர்மேலேறினன்; அசுரர்கள் பலரும்வந்து சூழ்ந்து ஆர்த்தார்கள். தாரகன் ஒருவில்லை வளைத்து அமர்க்களத்திற் சென்று நாணொசைசெய்து சரமழைபொழிந்தான். அதனால் பூதர்கள் நாற்புறத்தும் சிதறியோடினார்கள்.

இவற்றையெல்லாங்கண்ட நாரதர் இரங்கி நடுங்கியோடின இமையவருடன், இளம்பூரணன் திருமுன்சென்று அவருடைய இணையடிகளை இறைஞ்சிநின்று "எம்பெருமானே! தேவரீருடைய படைவீரர்கள் பெரும்போர்செய்து தாரகனை எதிர்த்தார்கள்; தாரகன் மாயையால் வீரவாகுதேவரையும் ஏனையவீரர்களையும் பூதசேனாதிபதிகளையும் கிரௌஞ்சமலையில் புகுவித்தான்; கிரௌஞ்சகிரியின்மாயத்தால் அனைவரும் மயங்கினார்கள்போலும்; தாரகன் இதனை அறிந்து நம்முடைய சேனைகளைச் சிதற அடித்தோட்டினன்; எங்கும் நிறைந்திருக்கின்ற தேவரீர் இவையெல்லாம் அறிவீரே!" என்று விண்ணப்பஞ்செய்தார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணைத்தடங்கடலாகிய அறுமுகப்பெருமான் கேட்டு தேவர்கள் துயரத்தை நோக்கி "எல்லோரும் கேண்மின்; நாம் போர்க்களத்திற்சென்று, தாரகனை வேற்படையாற் கொன்று, கிரௌஞ்சகிரியைப் பிளந்து, வீரர்களை ஒரு கணப்பொழுதில் மீட்டருள்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட அனைவரும் அல்லல்நீங்கி ஆனந்தமுற்று ஆடிப்பாடி அஞ்சலிசெய்தார்.

(தொடரும்).

உபதேசம்.

ஏ மனிதா!

நீ உன் வீட்டின் வாசலை உறுதியாகப் பூட்டிவிட்டு வெளியே நிற்பவர்களை உள்ளே அன்பில்லா அன்புடன், அழைத்தால் எவ்விதம் உள்புகுவார்? தாளைத்திறந்தால்தான் உள்செல்வார்; அதுபோல

உன் இருதயத்தை உறுதியாக மும்மலமாகிய கதவினால் அடைத்துக்கொண்டு இறைவனை அழைத்தால் எவ்விதம் பிரகாசிப்பார்? அவர் பிரகாசத்துடன் வர விரும்புகிறாயாயின் "இறைவனுக்காக இருதயத்தைத் திறந்துவைப்பாய்."

115

உ
ஓம் குஹாய நம:

கற்பு

(88-வது பக்கத் தொடர்ச்சி)

பெண்மக்கள் கண்ணுங் கருத்துமாகக் காப்பாற்றத்தக்கது கற்பொழுக்கமொன்றேயாம். உயிரையிழக்க நேரினும் கற்பை யிழக்கப்படாது; பேதமை என்னுங்குணத்தை மேற்கொண்டு ஒழுகுதல் வேண்டும். பேதமை என்பது, தமக்கு எல்லாந் தெரிந்திருந்தும் கணவன் எதிரில் ஒன்றுந்தெரியாததுபோலப் பெண்கள் அடக்கத்துடனிருத்தலாம்; "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" என்ற பொன்மொழியையும் உன்னுக பெண்கள் கணவனிடத்து மறந்தும் பொய் பேசக்கூடாது; கணவனுக்கு தெரியாமல் சீட்டுகட்டுவது; கணவனுக்குத் தெரியாமல் பிறரிடம் கடன்கொடுப்பது; கணவன் வெளியே போயிருக்கும் சமயம்பார்த்து அயல் பெண்களுடன் போய் ஜவுளி முதலியன வாங்குவது; இவைகள் அருவருக்கத்தக்கவாம். கணவனிடம் அடிக்கடி "இந்த நகைவேண்டும், அந்த நகைவேண்டும், ஜரிகை சீலை வேண்டும்" என்று தொந்தரை செய்து, அவன் மனத்திற்கு துன்பத்தை உண்டாக்கப்படாது. "காவல்தானே பாவையர்க்கழகு" என்றபடி பெண்கள் தக்கதோர் துணையின்றி வெளியே செல்லப்படாது தங்கள் உடம்பையும் கூந்தலையும் உடைகளையும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். நாயகன் வியாபாரம், உத்தியோகம், விவசாயம் இவைகளைப் பார்க்க வெளியே சென்ற பிறகு, வீணுரை பேசும் பெண்களையெல்லாம் அழைத்து, கூட்டம்போட்டுக்கொண்டு, எதிர்வீட்டு ஏகவல்லி மாமியார் பொல்லாதவள்; அடுத்த வீட்டு அம்புஜத்தின் நாத்தி வாயாடி; பக்கத்துவீட்டு பங்கஜம் ரொம்ப ரொம்ப பெருமை படைத்துக்கொள்ளுகிறாள்; அவளை ஒருநாளைக்குப் பேசிக்கொள்ளுகிறேன்" என்றெல்லாம் பயனற்ற வார்த்தைகளைப் பேசி வீண்காலம் போக்கப்படாது; கல்யாணம் முதலிய விசேடங்கட்குப் போனால், அங்கு யாராவது உயர்ந்த சீலையை உடுத்திக்கொண்டிருந்தால், அவர்களைப்பார்த்து, "அம்மா! இந்த சீலை நன்றாயிருக்கிறது; என்ன விலை? எந்தக்கடையிலெடுத்தீர்கள்?" என்று கேட்கப்

படாது; ஓய்வாக இருக்கும்போதெல்லாம், சந்திரமதி, தமயந்தி, நளாயணி, சாவித்திரி முதலிய கற்புடைக்காரிகையரது இனிய சரித்திரங்களைப் படிக்கவேண்டும்; படித்து அம்மாதரசிகளின் ஒழுக்கத்தை நன்ருக மனதில் பதியவைத்துக்கொண்டு சிந்திக்கவேண்டும்; சிந்தித்து அதன்படி நடக்க முயலவேண்டும்; அக்கற்பரசிகளைப் போல் தாமும் உலகம் போற்று நிலையைப் பெறவேண்டும் என்று ஆசைப்படவேண்டும்; தம்முடைய கணவர் செல்வமுடையவாயிருக்கினும், அவசியமற்ற செலவுகளைச்செய்யாது சிக்கனமாகவே செலவு செய்யவேண்டும்; தம்முடைய கணவர் பெரிய அதிகாரி, பெரிய தனவந்தர் என்று செருக்குற்று தலைநிமிர்ந்து நடக்கப்படாது; தம்மைவிடத் தாழ்ந்த நிலையிலிருக்கும் பெண்களைக்கண்டு பரிதாபமுற்று, தம்மால் ஆன உதவியைச்செய்து, அவர்களிடம் பாலுந் தேனும்போல மொழிக்கு மொழி தித்திக்கப் பேசவேண்டும். அவர்களுடைய துன்பத்தை இனிய மொழிகளால் மாற்றவேண்டும்; அல்ப விஷயங்களையெல்லாம் பெரிதாக எண்ணி எண்ணி எந்நேரமும் பெருங்கவலை யடையப்படாது; தமக்கு கிடைத்தவற்றைக்கொண்டு திருப்தியடையவேண்டும்; தம்மைவிடத் தாழ்ந்தவரைக்கண்டு நமக்கு இறைவன் இவ்வளவாவது கொடுத்தானே'' என்று மகிழவேண்டும்; ''எதிர்வீட்டுக்காரி வைர அட்டிகை போட்டுக்கொண்டிருக்கிருளே; நமக்கு இல்லையே'' என்று ஏங்கப்படாது; ''பதினைந்து ரூபாய் சம்பளக்காரன் மனைவி மாதத்திற்கு ஒரு புடவை வாங்குகிருளே—என்னென்னவோ நகை போட்டுக்கொண்டிருக்கிருளே? நீ நூற்றைம்பது ரூபாய் வாங்குகின்றனையே? உன்னுடைய மனைவியாகிய எனக்கு ஒன்றுமில்லையே? கண்டவனையெல்லாம் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு அழைத்துவருகிருயே? பணக்காரர் வீட்டில் எச்சில் கையில்கூடக் காக்கை ஓட்டுவதில்லையே? உனக்குமட்டுமென்ன இவ்வளவு தாராளம்; காலமெல்லாம் இப்படியே ஏமாந்த சோணகிரியாகப் பிழைத்தால் எப்படி? இந்தமாதம் எப்படியாவது கடன்பட்டாவது நான் கேட்ட நகையை வாங்கிக்கொடுத்தால்தான் விடுவேன்; இல்லையேல் பார் என்னசெய்கிறேன்'' என்று கணவனிடம் தகுதியற்றவும், வெறுக்கத்தக்கவுமான வார்த்தைகளைப் பேசப்பட்டாது; நாயகனுக்குப் பிரியமல்லாததைச் செய்யக்கூடாது. கணவன் எழுந்திருக்குமுன் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, நெற்றியை விபூதி குங்குமங்களால் அலங்கரித்து நாயகனைத் துயிலுணர்த்தவேண்டும்; நாட

கம், வேடிக்கை முதலியவற்றை ஒருபோதும் பார்க்கப்படாது; நாயகனுடன் திருவாலயஞ் சென்று இறைவனை வழிபாடு செய்யவேண்டும்; உரலிலும் அம்மியிலும் வாசற்படியிலும் உட்காரப்படாது. ஆடவர்கள் ஒருவரும் இல்லையென்று தெருத் திண்ணைமேல் உட்கார்ந்து தெருவேடிக்கைப் பார்க்கப்படாது; மாடியின் மேலிருந்தும் பலகணிக் கதவுகளைத் திறந்தும் தெருவில் போகின்ற ஆண்மக்களைப் பார்க்கப்படாது. அவர்கள் பார்க்கும்படியாகவும் நிற்கப்படாது. உபயோகமில்லாத சாமான் மலிவாக இருந்தாலும் அதனை வாங்கப்படாது. கணவனைக் கடன்காரனாக்கப்படாது. "கடன்படாது கால்வயிறு கஞ்சி குடித்தாலும் அதுவே சிறந்தவாழ்வு' என்று கருதி, கடன்வாங்காமல் இருப்பதைக்கொண்டு சமர்த்தாகக் குடித்தனஞ் செய்யவேண்டும்; "நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே ஆளில்லா மங்கைக்கழகு" என்றபடி கணவன் இல்லாதபோது தங்களை அலங்கரித்துக் கொள்ளப்படாது; கணவன் அனுமதியின்றியும் தக்க துணையின்றியும் தேர் திருவிழாக்களுக்குப் போகப்படாது, அறிவைக் கெடுக்கும் அசட்டுப் புத்தகங்களைப் படிக்கப்படாது; தங்களுடைய குழந்தைகளுக்கு அவ்வப்போது நல்ல நீதிகளை நன்றாக மனதிற்படும்படி உபதேசிக்கவேண்டும்.

இல்லதேன் இல்லவள் மாண்பானல் உள்ளதேன்
இல்லவள் மாணுக் கடை

என்ற பொய்யாமொழிப்படி, தங்கள் அரும் பெருங்குணத்தால் வீட்டில் ஒன்றுமில்லையாயினும், எல்லாமிருக்கின்றதென நாயகனுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கவேண்டும்; கணவன் பிறருடன் பேசும்போது கதவின் பிறகேயிருந்து ஒற்றுக் கேட்கப்படாது. நாயகனுக்கு ஆயுள், செல்வம், புகழ் முதலியவை மென்மேலும் வளருமாறு கடவுளை வணங்குதல் வேண்டும்; தேவாரம் திருவாசகம் திருப்புகழ் திருவருட்பா முதலிய அருள் நூல்களை அந்திவேளையில் உளங்கசிந்து ஓதவேண்டும்; தேனும் பாலும்போல இனிமையாகப் பேசவேண்டும். எச்காரணத்தை முன்னிட்டும் கர்னகடூரமான கடுமொழிகளைப் பேசப்படாது; அடித்தாலும் நாயகனேகதி; அணைத்தாலும் நாயகனேகதி என்று கணவனுக்கு அடங்கி நடத்தல்வேண்டும். இத்தகைய குணங்களை யணிகலன்களாகக் கொண்ட உத்தமப் பெண்கள் பண்டைக் காலத்தில் பலர்தோன்றி நம்நாட்டை அலங்கரித்திருந்தனர்; அவற்றில் ஒன்றை வரைகுதும்.

வட இந்தியாவில் கி.பி. 1517-ம் ஆண்டில் மிராடபுரியில் இராஜ வம்சத்தில் அரதனசிங்கு என்னும் ஒரு மன்னனிருந்தான். அவனது தவத்தின்பயனாக மீராபாய் என்னும் ஒரு பெண்மகவு தோன்றியது. அக்குழந்தை காண்பார் கண்ணைக்கவருங் கட்டழகுடன் வளர்ந்தது. "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்றபடி அப்பெண் குழந்தைக்கு இளமையிலிருந்தே கடவுட்பக்தி வளர்ந்தோங்கியது. அக்குழந்தையின் மனக்கோயிலில் கண்ணபிரான் குடிபுகுந்தனர். கண்ணா! கண்ணா! என்று கூவியழைக்கும். பொம்மை, மண்சொப்பு, ஏழாங்கல் முதலிய எல்லாவிளையாட்டுக் கருவிகளும் கிருஷ்ணவடிவமாகவே அக்குழந்தைக்கு விளங்கியது. ஐந்தாவது ஆண்டிற் பள்ளியிற்சென்று படித்து நூலறிவு பெற்றார். அம்மையார்க்கு 12-வது ஆண்டு பிறந்து வயது வளரவளர பகவத்பக்தியும், அடக்கமும் வளர்ந்தன. "இறைவனைக் காணுநாள் என்றோ?" என்று ஏங்குவார். கண்ணபிரானைக் காண்பதற்கு மிகவும் விரைந்து முயன்றுவந்தார். கண்ணா! மணிவண்ணா! ஆயர்குலக்கொழுந்தே என்று தொழுவார்; "ஆவியீடேறும் வழியைச் சொல்லமாட்டாயோ" என்று அழுவார்; அன்பினால் பாடிப்பாடி மூர்ச்சித்து விழுவார்; அடியார்களைக் கண்டால் விரைந்து எழுவார்; தன்வசமழிந்து பாவசமுற்று இன்பவடிவமாகிய இனிய பாடல்களைப் புதிது புதிதாகப் பாடுவார்; இறைவன் அருட்குணங்களை நாடுவார்; அப்பன் எங்கே எங்கே என்று தேடுவார்; விரைந்து ஓடுவார்.

அம்மையார் மங்கைப்பருவமடைந்தார்; திருமகளைப்போல் தெய்வவனப்புடன் திகழ்ந்தார்; அவர் முகமண்டலத்தில் அருள் ஒளி வீசிற்று. மணப்பருவமடைந்தார்; தாய்தந்தைகள் திருமணத்தைப் பற்றி ஆலோசித்தார்கள். அதுகண்ட மீராபாய் தாயாரைத் தனியே வணங்கி, அம்மா! என்மனம் கண்ணபிரானிடம் பொருந்தியுளது; சாமான்யமான மனிதர்களிடம் பற்றவில்லை; என் உடலும் உள்ளமும் கண்ணனுக்கே உரியவாம்; கண்ணன் கழலிணையே கருதுங்கருத்துடையேன்; அவருடைய திருவடித்தொண்டைப்புரிந்து காலங்கழிப்பேன்; ஆதலால், அடியேனுக்கு கல்யாணஞ் செய்யாதிருக்கவேண்டுகிறேன்" என்றார் தாயார் இவ்வசனங்களைக் கேட்டு, சிறிது சினமடைந்து, "குழந்தாய்! சிறுபெண்ணாகிய உனக்குப் பெரிய பேச்சு எதற்கு? சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதே. பெரியவர்கள் எதைச் செய்கிறார்களோ அதைச் செய்துக்கொள்; அதுதான் உன்கடமை

சும்மாபோ" என்று அதட்டிவிட்டாள். அம்மையார் ஒன்றும் பேச வில்லை. "இறைவன் திருவுளம்போல் நடைபெறுக" என்று எண்ணி எவ்வேளையும் இறைவனைச் சிந்தித்து வந்திருந்தார்.

தாய்தந்தையர் மகளுக்குத்தக்க வரனைத் தேடினார்கள்; பிறகு மீவார் தேசத்தரசனாகிய சாங்கமன்னனது மைந்தனாகிய போஜமன்னனுக்கும் மீராபாயம்மையாருக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது அம்மையார் அரசமாதேவியாக விளங்கினார்; கணவனோடு கலந்து கண்ணன்மீது கவிகள் பல பாடினார்; பட்டாடை யுடுப்பதையும், பொன்னாபரணங்களை யணிவதையும் வெறுத்தார்; தவப்பெண்கள் போல் மரவுரியையே தரிப்பார்; தரைமேல் மான்தோலின்மீது படுப்பார்; உலகவாழ்வு அவருக்கு வெறுப்பாகத் தோன்றியது; தனக்கிசைந்த தோழியரைக்கூட்டித் தாம்பாடிய கீதங்களைச் சொல்லிக்கொடுத்தார்; அவர்களுடன் சேர்ந்து பாடுவார்; அவருடைய அன்பு வளர்பிறை மதிபோல் வளர்ந்தோங்கியது; அரண்மனை அவருக்குச் சிறைச்சாலையாக இருந்தது; கண்ணபிரானுடைய திருக்கோயிலுக்குப் போவார்; அங்கு பெண்மக்களுடன் மனமுருகிப் பாடுவார்; நெடு நேரம்வரை தன்னைமறந்து நிற்பார்; பின் அரண்மனைக்குவந்து கணவனுக்கு வேண்டியவற்றைச் செய்வார்; நாள்தோறும் கோயிலுக்குப் போய் என்புருகப்பாடியாடுவார்; இவருடைய தேனினுமினிய பாடலைக் கேட்க மதுவை நாடிவரும் வண்டினங்களைப்போல் திரளான கூட்டங்கள் கூடின; நெடுந்தூரத்திலிருந்து கூட்டங்கூட்டமாக அம்மையார் பாடலைக்கேட்ட ஜனங்கள் வந்துகொண்டேயிருந்தார்கள்; அம்மையார் புதிதுபுதிதாக அருள்மயமாக நின்று பாடுவார்கள்; அப்பாடல்கள் அத்தனையும் சொல்லழகும் பொருளழகும் உடையனவாயிருந்தன. அம்மையார் பாடலைக்கேட்டு கல்மனமுடையாரும் கசிந்துருகிக்கதறுவார்கள். கல்லுமுருகும், ஜனங்கள் அனைவரும் அம்மையாரை பெண் தெய்வமாக நினைந்து வணங்கி வாயார வாழ்த்தினார்கள்; பலாப்பழத்தை ஈக்கள் மொய்ப்பதுபோல் அன்பர்கள் அம்மையாரைப் பக்தியுடன் சூழ்ந்திருந்தார்கள்; அவர்களும் உலக இன்பத்தை வெறுத்து அருள்நெறியை நாடிநின்றார்கள்.

அம்மையாருடைய புகழ் உலகெங்கும் பாவியது; அவருடைய அருளொளி வீசிற்று; அக்காலத்தில் அரசர்பெருமானாக இருந்து அரசாண்ட அக்பர் சக்கிரவர்த்தி செவிக்கும் எட்டியது; அக்பர் அம்மையாரைச் சேவிக்கவும் அவருடைய பாடல்களையுங்கேட்க விரும்பி

ளர்; "ஒரு அரசனது மனைவியை நாம் எப்படிக்காண்பது? அதிலும் இந்து இராணியை துருக்கிச் சக்கிரவர்த்தியாகிய நாம் காண்பது அரிதாயிற்றே? உலகம் பழிக்குமே? உலகம் புகழும் உத்தமியைத் தெரிசிப்பது எவ்வாறு?" என்று பலமுறைச் சிந்திப்பார். தமது அரண்மனைச் சங்கீதவித்வானாகிய தான்சென் என்பவனிடம் தமது கருத்தைக்கூறி அவ்வெண்ணம் நிறைவேறும் வழியைக்கேட்டார். தான்சென், மன்னர் மன்ன! சந்நியாசவேடத்துடன் தாங்கள் சென்று தெரிசிக்கலாம்; சந்நியாசவேடம் எங்கும் யாரையும்பார்க்க இடங்கொடுத்தருளும்; தங்களையும் ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள்;" என்றான். அக்பர் அவனுடன் சந்நியாசவேடந் தாங்கிவந்தார். அம்மையார் வழிபடுங்கோயிலுக்கு வந்தார்; அம்மையார் பாடலைக் கேட்டார்; அவருடைய மனம் உருகிற்று; ஆனந்தக்கண்ணீர் வடித்தார்; உரோமஞ்சிலிர்த்தார்; உடனே அம்மையாருடைய திருவடித்தாமரைகளின்மேல் அடியற்றமரம்போல் விழுந்து வணங்கி, "பக்தியின் மிக்க உத்தமியே! என்னையாளுடைய அன்னையே! அடியேனுடைய ஆவியீடேறுமாறு உபதேசிக்கவேண்டும்; மோட்ச உலகத்திற்கு வழிகாட்டவேண்டும்,, என்று வேண்டிநின்றார். அம்மையார் அவருடைய அன்பின்பெருக்கைக்கண்டு மகிழ்ந்து, அருமையான ஞானமொழிகளால் இறைவன் திருவருள்நெறியை இனிமையாக எடுத்துவிளக்கிக்காட்டினார். அக்பர் புளகிதமுற்று, பாவசமடைந்து, விலையுயர்ந்த ஒரு பெரும் வைர கண்டசரத்தை அம்மையார் பாதத்தில் காணிக்கையாகவைத்து வணங்கினார். அதுகண்ட அம்மையார் அதிசயமுற்று; "துறவிக்கு இத்தகைய சிறந்த ஆபரணம் ஏது? இது எனக்கு எதற்கு? இறைவன் திருவடிப்பக்திக்கு இடையூரல்லவா? என்று வியந்து, ஏ! சந்நியாசியே! உமக்கு இது எப்படி கிடைத்தது? நல்வழியிற் கிடைத்ததா?" என்று வினவினார். அக்பர், அம்மணீ! அடியேன் யமுனாநதியில் நீராடும்போது இந்நகை எனக்குக் கிடைத்தது; இதனை உமது தெய்வத்திற்கு நிவேதனப்பொருளாகத் தந்தேன் ஏற்றுக்கொண்டருள்வீர் என்றார். அம்மையார் அதனை எடுத்து கிருஷ்ணவிக்கிரகத்தின் கழுத்தில் தொங்கவிட்டார். அக்பர் அச்செய்கையைக்கண்டு வியந்து தன் நகருக்கேகினார்.

அம்மையாருடைய கணவனாகிய போஜனுக்கு அம்மையார், கோயிலில் கூட்டங்கள் மத்தியில் ஆடுவதும் பாடுவதுமாக இருப்பது வெறுப்பாக இருந்தது; தன் மனைவியைக் கண்டிக்கவேண்டுமென்று எண்ணி

இருந்தான்; அச்சமயத்தில் வைரக்கண்டசரவிஷயம் அவன் காதிற்கு வந்தது; அதை அவன் வரவழைத்துப் பார்த்தான்; பத்துலட்ச ரூபாய் மதிப்புள்ளதாக இருந்தது; "இவ்வளவு விலையுயர்ந்ததைக் கொணர்ந்து பரிசளித்தவன் யார்?,, என்று ஐயுற்றான். அதைக் கண்ட ஓர் வியாபாரி அக்கண்டசரத்தை அக்பருக்குத் தான் விற்றதாகக் கூறினன். மன்னன் கேட்டு தன்மனைவியைத் துருக்கன் கண்டு பேசினன் என்பதை மனம்பொறுக்கவில்லை; இந்த அவமானத்தைவிடப் பெரிய அவமானம் யாதுளது? "இத்தகையபத்தினியை உயிருடன் வைத்திருக்கப்படாது" என்று வெறுப்புற்றான். உடனே அம்மையாரைப்பிடித்து சிறையிலடைத்தான்; அம்மையார் சிறைச்சாலையிலும் கண்ணனைப்பாடிக்கொண்டு, சிறிதுகூட நெஞ்சங் கலங்காமலும், கணவனை வெறுக்காமலும் இன்புற்று இருந்தார். பெரியோர்களுக்கு இன்பமும் துன்பமும் ஒன்றேயல்லவா?

அரசன் அம்மையார் சிறைச்சாலையிலும் ஆடல் பாடலுடன் கண்ணனைப்பாவி மகிழ்ந்திருப்பதுகண்டு உளம் சகிக்காது அம்மையாருக்கு விஷத்தைக்கொடுத்தான்; அம்மையார் அவ்விஷத்தைவாங்கி விஷத்தையுடைய அரவையே அணையாகக்கொண்ட அனந்தசயனனை துதித்து மனமகிழ்ச்சியுடன் குடித்தார். அவ்விஷம் அவருக்கு அமிர்தமாக மாறியது அரசன் அதுகண்டு வியப்புற்று, ஒரு கொடியவிடப் பாம்பை தங்கப்பெட்டியிலடைத்து, அம்மையாரிடங் கொண்டுபோய் "இதில் துளபமணிமாலை இருக்கின்றது" என்று சொல்லிக் கொடுத்தான். அம்மையார் துளபமாலை என்றவுடனே மிகவும் ஆவலுடன் வாங்கி, பெட்டியைத்திறந்தார்; அதிலிருந்த பாம்பு படமெடுத்துச் சீறிவந்து கடித்தது; அம்மையார் அதைக்கண்டு "அப்பனுடைய சயனமென்று" மகிழ்ந்து அப்பாம்பை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, "அரவணைச் செல்வ! அறிதுயிலமர்ந்த அண்ணலே!" என்று ஆனந்தக்கூத்தாடினார். இவ்வற்புதச்செயலைக்கண்ட மன்னன் வியப்பும் அச்சமும் ஒருங்கேயடைந்து திகைத்து நின்றான். பாம்புக்கும் அஞ்சாத பாவையே! இன்னும், நீ உயிருடன் இராதே மாயவித்தைகளைக் கற்றுக்கொண்டு எங்களை மயக்குகின்றாய்; உன்னைக் சாண எனக்கு விருப்பமில்லை; ஆதலால், நீ இறக்கக்கடவாய்" என்று கூறினன். அம்மையார் கணவனைப்பணிந்து, "அப்படியே தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்" என்றார்.

அம்மையார் நடுநிசியில் எழுந்தார். எங்கும் ஒரே இருள்; கண்ணனைக் கருத்திலிருத்திக்கொண்ட அவருக்கு சிறிதும் அச்சமென்பதே இல்லை; கண்ணா! கண்ணா! என்று பாடிக்கொண்டே சிறையை விட்டு நடந்தார்; பிரவாகமாக வெள்ளமோடும் ஆற்றங்கரைக்கு வந்தார்; ஈன உலகத்தின் துன்பவாழ்வை வெறுத்தார்; "கண்ணா! நீ என்றுமகலாது கண்துஞ்சும் நீருக்குள் உன்னுடன் கலந்திருக்க அடியேனும் வருகின்றேன்" என்று ஆற்றில் குதித்தார்; தண்ணீருக்குள் முழுகிய அம்மையாரைத் தண்ணீரால் கொல்லமுடியவில்லை; உடனே அம்மையாரை ஒரு கருமுகில்போன்ற ஒரு தெய்வவடிவம் வந்து எடுத்து மேலே விடுத்து, அம்மணீ! நீ பெண்மணிகளுக்குள் கண்மணிபோன்றவள்; உன்னால் அநேகர் நல்வழிப்படவேண்டும்; இன்னும் சிலநாள் இவ்வுலகில் நீ தங்கியிருந்து மனிதர்களுடைய மருளை நீக்கி அருளையுண்டாக்கிப் பின்னர் நமது உலகத்திற்கு வருவாய்; அஞ்ஞானமாகிய இரவில் தூங்குவோருக்கு ஞான ஒளியைக்காட்டித் தட்டி எழுப்புதற்கு விரைந்துசெல்" என்று கூறி மறைந்தது. மீராபாய் கண்ணன் தனக்குச்செய்த திருவருளை நாடி உளங்கசிந்து நடந்தார்; சூரியன் தோன்றினான். அம்மையார் ஆண்டவனைப் பாடிக்கொண்டே பிருந்தாவனத்தைத் தேடிச்சென்றார்; வழியில் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் வழி கேட்டுக்கொண்டே பிருந்தாவனஞ் சேர்ந்தார். அங்கிருந்து ஆண்டவனை அருட்கண்ணால் பார்த்துப் பரவசமடைந்து பாடினார். அப்பாடல்களைக்கேட்டு கல்லும்புல்லுங் கரைந்துருகின; பறவைகளும் மிருகங்களும் அசைவற்று நின்றன; திரளான ஜனங்கள் கூடினர்; அவர்கள் அம்மையாரைப் பணிந்து அவரது பாடலில் ஈடுபட்டு அருள்வழியில்நின்று ஆனந்தவாரிதியில் மூழ்கினார்கள். அம்மையார் பிருந்தாவனத்தில் இருந்த ரூபகோசனர் என்னும் மாதவரையடுத்து அவருடன் இனிது காலங்கழித்துவந்தார்.

மீராபாய் அம்மையாருடைய பாடல்கள் எங்கும் பரவின. ஒவ்வொரு கிராமத்திலும் அவர் பாடல் முழங்கிற்று; உலகெங்கும் அம்மையாரைப்பற்றியே பேச்சு நிகழ்ந்தது; போஜமன்னனது நகரமாகிய சித்தூரில் மக்களனைவரும் அம்மையார் பாடலை அன்புடன் பாடினார்கள். அப்பாடல்களின் முடிவில் மீராபாய் என்ற திருநாமம் அமைந்திருந்தது. நாள் செல்லச்செல்ல போஜமன்னன் தனது பத்தினியின் பக்தியையும், அவரது உறுதியான தவநிலையையும், அவரது பாடலின் பெருமையையும், அவரை உலகம் போற்றுவதையும்

கண்டு, அவருக்குத் தான் இழைத்த இன்னலை நினைத்து வெட்கப்பட்டான்; தன் அறியாமையை எண்ணிஎண்ணித் துக்கப்பட்டான்; "நமது ஆட்சி நமது நாட்டில்மட்டுமே செல்லத்தக்கது; நமது மனைவியின் ஆட்சி உலகமுழுவதும் சென்று மிளிர்கின்றன; நமது ஆட்சி மக்களது புறவொழுக்கத்தை யொட்டியிருக்கின்றது; நமது மனைவியின் ஆட்சி மக்களது அகவொழுககத்தை யொட்டியிருக்கின்றது; நமது ஆட்சி அழியக்கூடியது; நமது மனைவியின் ஆட்சி என்றென்றும் நிலைத்துநிற்பதாகும்; ஆ! ஆ! நமது சித்தூரிலிருந்து திரள் திரளாக மக்கள்போய் நமது மனைவியை தெய்வமாதாக நினைத்து வழிபட்டு வருகிறார்கள்; உலகமுழுவதுமே போற்றுகின்றது; நான்மட்டும் நமது மனைவியின் பெருமையை அறியாது பல இன்னல்களை விளைத்தேன்; என்னே என்பேதமை?" என்று வருந்தினான்.

ஜனங்கள், பூதலம்போற்றும் மாதரசியைத் துறத்திய அரசனுடைய கன்னெஞ்சை வெறுத்துப் பழித்தார்கள். அரசன் உலக நிந்தையைக்கேட்டு மிகவும் வருந்தினான்; "என்னசெய்வது" என்று பலநாள் சிந்தித்தான்; தானே நேரில்போய் மனைவியைக்கண்டு அரண்மனைக்கு அழைத்துவந்து சமாதானஞ்செய்வது என்று தீர்மானித்தான். அரசன் ஒரு ஏழைச்சந்நியாசிபோல் வேடந்தாங்கி பிருந்தாவனஞ்சென்றான்; மீராபாயம்மையாரைக் கண்டுகளித்தான்; அம்மையாருடைய தவவொழுக்கத்தையும் அவருடைய கடவுட் பக்தியையும் ஜனங்களுக்கு அவரிடமிருந்த மதிப்பையுங்கண்டு இரும்பூதுற்றான். கோயில்வாயிலில் நின்று அம்மையாரைப் பிச்சைகேட்டான்; அம்மையார் "ஐயா! நான் ஒரு ஏழைப்பரதேசி; உனக்குத்தர என்னிடத்தில் ஒன்றுமில்லை; உனக்கு ஆசீர்வாதம் வேண்டுமென்றால் இறைவன் திருவருள் துணைகொண்டு தருகிறேன்" என்றார். அரசசந்நியாசி, உம்மிடத்தில் ஒரு உதவியைநாடி வந்திருக்கிறேன்" என்றான். அம்மையார், "என்ன உதவி" என்றார். அரசன், "என்னை மன்னிக்கும் பேருதவியே" என்று சொல்லிக்கொண்டே, சந்நியாசி வேடத்தை நீக்கினான். அம்மையார் கணவனைக் கண்டு எழுந்து பணிந்தார். அரசன், "அரண்மனைக்கு வரவேண்டு" மென்றான். அம்மையார், கணவன் சொல்லை மறுக்கவில்லை; நாயகன் பிறகே நடந்தார்; அரண்மனையில் அரசனுடன்வந்து தவ வாழ்க்கையில் இருந்து இன்புற்றார். ஆறு மாதம் அரண்மனையிலும் ஆறுமாதம் பிருந்தாவனத்திலுமாக இருந்து இறைவனை வழிபட்டு வந்தார். அநேக அற்புத பாடல்களைப்பாடி உலகை இன்பமயமாகச்செய்தார். முடிவில் பூதவுடம்பை மறைத்து புகழுடம்பை நிலைநிறுத்தி கண்ணன் கழலிணை நிழலிற் கலந்தார்.

(தொடரும்)

124

உ

கார்த்திகேயன் துணை.

பேராசை பெரு நஷ்டம்

பேராசை யெனும் பிணியில் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ"

ஓர் ஊரில் பாவகிருபணன் என்னும் எளிய பிராமணன் ஒருவன் இருந்தான்; அவன் மனத்தில் எப்போதும் ஆசையே குடிகொண் டிருந்தது; அதனால் அவன் மனம் ஒருபோதும் சாந்தியை யடைய வில்லை; புதையல் அகப்படுமா? என்று ஏக்கமிட்டு உலாவுவான்; தெருக்களில் உலாவும்போது ஏதாவது (மணிபர்ஸ்) கிடைக்குமா? என்றும், அதில் நிறையப் பணமிருக்கவேண்டுமென்றும் சிந்தித்து வருவான்; அவனுக்குப் பிச்சையெடுப்பதுவேலை. மணலும் புழுதி யும் நிறைந்த ஒரு பாழுஞ் சத்திரத்தில் படுத்துறங்குவான்; பேராசைப் பேய்பிடித்தவனுக்கு இரவில் தூக்கம்பிடிக்காதல்லவா? அந்தப் பிராம்மணன் காலையில் சென்று அரிசி பிச்சையெடுத்துவந்து அந்தச் சத்திரத்தில் சமைத்து உண்டு இரவெல்லாம் நன்கு உறங்காது இந்த மணலெல்லாம் பொன்னாக ஆய்விடாதா? அப்படி ஆகிவிட் டால் இந்தப் பொன்மணல்களை எங்கு சேமித்துவைப்பது? பெரிய பெட்டியாக வேண்டுமே? எங்கு விற்பனை செய்வது? என்றும் தொட்ட பொருள்களெல்லாம் பொன்னாகாதா? என்றும், நாம் இருக் கிற இடத்தில் மட்டும் பொன்மழை பெய்யாதா? என்றும் பற்பல எண்ணுவான்; எண்ணிஎண்ணி பெருமூச்செறிவான்.

அவன் நாள்தோறும் பிச்சையெடுத்துவரும் அரிசியில் தான் புசித்து மிகுந்ததை ஒரு புழையபானையில்போட்டு அப்பானையைச் சுவரிலிருந்த மூலையில் தொங்கவிட்டிருந்தான். பின்னர் ஒருநாள் அப்பானை நிறைய அரிசி சேர்ந்துவிட்டதைப்பார்த்தான்; மிகுந்த சந்தோஷத்தை யடைந்தான், படுத்தவண்ணமாகவே அந்தப் பானை யைப் பார்த்துப்பார்த்து இராமுழுதும் பின் வருமாறு யோசிக்க லானான்.

இந்தப்பானைநிறைய அரிசியிருக்கிறது, எங்கும் மழைபெய்யாது பஞ்சகாலம் வரவேண்டும், அப்படி வந்துவிட்டால் அரிசி எங்கும் கிடைக்காமற் போய்விடும். அநேக செல்வவந்தர்கள் பணத்தை

வைத்துக்கொண்டு அரிசி வாங்கவேண்டுமென்று அலைந்து என்னிடம் வருவார்கள். நாம் அப்போது இந்த அரிசியைப் பத்துரூபாய்க்கு விற்றுவிடவேண்டும். அந்தப்பணத்தைக்கொண்டு இரண்டு ஆடு வாங்கி இடையனிடத்தில் விடவேண்டும். அவைகள் ஆறுமாதத்துக்கு ஒருதரம் குட்டிபோட்டால், சிலவருடங்களுக்குள் ஒரு மந்தை ஆகும். பின்பு அந்த ஆடுகளில் சிலவற்றை விற்றுப் பசு வாங்குவேன். அப்பசு கன்றையீன்று பால்கறந்தால் அந்தப்பாலையெல்லாம் விற்றுப் பணஞ்சேர்த்து ஓர் எருமை வாங்கவேண்டும். ஆட்டுமந்தை பசு, எருமை இவைகளுடன் சுகமாக இருக்கும்போது எருமை பசு இவைகளின் கன்றுக்குட்டிகளைவிற்று ஒரு பெட்டைக்குதிரை வாங்குவேன். குதிரை குட்டிபோட்டவுடன் அதனை வளர்த்து நல்லவிலைக்கு விற்கவேண்டும். பின்பு அந்தப்பணத்தைக்கொண்டு நான்கு தாழ்வாரமுள்ளதும் ஆடுமாடுகளைக் கட்டுவதற்குப் பின்புறம் தோட்டமுள்ளதுமாகிய ஒரு பெரிய வீட்டை வாங்கவேண்டும். அந்த வீட்டில் நாம் குடிபுகுந்து பெரியமனிதனாக பால் வர்த்தகம் ஒருபக்கம். நெய்வர்த்தகம் ஒருபக்கம், ஆடுமாடுகளின் எருவை ஒரு பக்கம் கொட்டிவைத்திருந்து, எரு டிப்போ ஒரு பக்கம் வைத்து கண்ணியமாக இருப்பேன். அப்போது நாலுபேர் என்னைப்பார்க்க வருவதும் போவதுமாக இருப்பார்கள். அநேக பிராம்மணர்கள் வந்து என்னைப் பார்த்து இன்னும் கலியாணமாகவில்லையென்று தெரிந்து என்னுடைய ஜாதகக்குறிப்பை வாங்கிக்கொண்டுபோவார்கள். அப்போது நான் "வரதக்ஷிணை ஆயிரம் தரவேண்டும்" என்பேன். அதில் ஒரு பணக்காரன் ஆயிரம் ரூபாயைத்தந்து நிரம்பச் சீதனத்தையுந்தந்து தன் மகளை எனக்குக் கல்யாணஞ்செய்து தருவான். பின்பு அந்தப்பெண் புஷ்பவதியாக ஆனவுடன் சாந்திக்கல்யாணத்திற்கு நாள் வைப்பார்கள். அப்போது நான் வைர மோதிரமும் வைரக் கடுக்கனும் போட்டால்தான் சாந்திகல்யாணஞ் செய்துகொள்வேன் என்பேன். மாமனுர் வேறே வழியின்றி கடன்பட்டாவது நான் கேட்ட நகைகளைப் போட்டு சாந்திகல்யாணம் பண்ணிவைப்பார். பிறகு ஓராண்டில் ஆண்குழந்தை பிறக்கும். பிள்ளைக்கு சோமசர்மன் என்று பெயரிடுவேன். குழந்தை மெல்லத் தவழும் பருவம் அடைந்தவுடன் என் பத்தினி குழந்தையுடன் இருப்பாள். அப்போது நான் குதிரைக் கொட்டாரத்துக்குப் பின்புறம் தோட்டத்தில் ஒரு புல்மேடையில் அமர்ந்து ஒரு புத்தகத்தைவைத்துப் படித்துக்கொண்டிருப்பேன். அவ்வாறு படித்துக்கொண்டிருக்கும்போது, பிள்ளை என்னைப்பார்த்

126

உ

ஓம் குஹாய நம:

திருநீற்று மகிமை

G. வேலாயுதன், உபாத்தியாயர், தலைக்குளம்.

அன்புடையீர்!

திருநீறு என்பதின் பொருளை சற்று ஆராய்வோம். பரிசுத்த முடையது நீறு. நீறு என்பது அதற்குக் காரண நாமமாக வரக் காரணம் என்னை? அது நீற்றும் தன்மையுடையது; எதை நீற்றும் தன்மையுடையதெனில், மும்மலங்களையும் நீற்றுந் தன்மையுடையது. ஆதலால்தான் இதனைப் பரிசுத்தமுடையதாய்க் கொள்கின்றார். இனி இதன் மகிமையைச் சற்றாராய்வோம்.

தத் தாயின் மடியிலிருந்து இறங்கி என்னிடம் ஓடி வரும் குழந்தை குதிரையின் காலடியில் வருவதைப்பார்த்து நான் கோபித்து, மனைவியை நோக்கி, "பெண்ணே குழந்தையை எடு, குழந்தையை எடு" என்று சொல்லுவேன். வீட்டு வேலையைச் செய்துகொண்டிருப்பதால் அவளுக்கு நான் சொல்லுவது கேளாது. உடனே எனக்குக் கோபம் மூண்டுவிடும். "பல பேரை வைத்துக்கொண்டு வேலைவாங்குகின்ற பெரிய மனிதனாகிய நான் இரண்டுமுறை சொல்லியும் காது கேளாதவள்போல் இருக்கின்றாயே? அசடே! உனக்கு, இத்தனை அகங்காரமா? என்னை என்ன என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்? பிச்சைக்காரச் சிறுக்கியே! என் பெருந்தன்மையை இன்னுமா நீ தெரிந்துகொள்ளவில்லை" என்று எழுந்து நான் அவளை இப்படிதான் உதைப்பேன், என்று நினைத்து கொண்டே பானையைக் காலால் உதைத்து உடைத்தான். பானை உடைந்து அதில் இருந்த அரிசியெல்லாம் மணலிலும் புழுதியிலும் சிதறிப் பாழாயின.

அதுகண்ட பிராமணன் தனது பேராசையின் பீடையும், அதனால் முதலுக்கே வந்த மோசத்தையும், தன் னறியாமையையும் எண்ணி ஏங்கி இடருற்றான்.

"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்"

பேரன்புடையீர் !

மந்திரம், தந்திரம், சுந்தரம், தேவர்களுக்கும் மேலானது துதிக்கப்படுவது, கடவுளையடையும் மார்க்கமாகிய மெய்ச்சமயமாம் சைவ சமயத்தில் மூலக்கல்லாக இருப்பதும் திருநீறன்றோ? இதனை

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே"

என்றார் திருஞானசம்பந்தரும்.

மேலும் பரம்பொருளாம் பரமன், அடியார்க்கு எளியனாய்நின்று காட்சிகொடுக்கும்போது அன்னாது நெற்றியின்கண் விளங்கினதுவும் திருநீறே என்பதனை

காடுடைய சுடலைப் பொடி பூசியென்
னுள்ளங் கவர் கள்வன்

என்று சம்பந்தரும்

பூசுவதும் வெண்ணீறு

என்று மணிவாசகரும் கூறுமாறு காண்க:

இத்துணை பரிசுத்தமுடைய நீற்றின் நிறத்தை கவனிப்போமாயின் வெண்மை. அஃது எகவல்ல பரம்பொருள் எங்கும் களங்கமின்றி ஒளியாய் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறார் என காட்டுகிறதன்றோ?

அத்துணை பெருமை வாய்ந்திருக்கும் நீற்றின்மீது சிலர் சந்தனம் எனும் வாசனை திரவியத்தையணிகிறார். அஃது எவ்விதமானது என சற்றாராய்வோம்.

சந்தனம் வாசனைத் திரவியங்களில் ஒன்று வாசனை திரவியங்கள்; மாந்தர்களை மாய்கையில் சிக்கவைக்கும் பஞ்சபாணனாகிய காமனுக்குரியது. ஓர்கால் மன்மதன் வாசனைத் திரவியங்களாகிய மலர்களை இறைவன்மேற்றூவ இறைவன் என்செய்தார்? தழலெழ விழித்து நீறாக்கினர். இதனை சற்றாராயுங்கால் என்ன தோன்றுகிறது? கவனியுங்கள்.

மெய்யன்புடையீர் !

மும்மலத்தினை அகற்றுவான் வேண்டி வாசனை பொருட்களை அகற்றுங்கள் என நின்மலக்கடவுள் மானிடர்க்கு காட்டியுள்ளார் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்காநிற்கின்றது; என்னே இறைவனது அன்பு?

128

உ

ஓம் குஹாய நம:

குமாரகுருபர ஸ்வாமிகள்

சரித்திரம்.

A. M. நாராயணசாமி அய்யர், மதுரை.

(96-ம் பக்கத் தொடர்ச்சி.)

வைகரையில் துயிலெழுந்து கடலில் ஸ்நானஞ்செய்து தம்பதிகள் இருவரும் குழந்தைகளுடன் முருகப்பெருமானது திருமுன் அடைந்து, "மூவடிகேட்டன்று மூதண்டகூட முகடுமுட்டச் சேவடி நீட்டும் பெருமான் மருகன்தன் சிற்றடியை" சிந்தையில்கொண்டு, தொழுதுபோற்றி "முருகா! என ஓர்தரம் ஓதும் அடியார்மேல் இணைதாள் அருள்வோனே! திருக்கைவேல் அழகிய பெருமாளே! அயிலும் மயிலும் மறமும் நிறமும் அழகும் உடைய பெருமாளே! நினைவார்கின்னங்களையும் நித்திய கல்யாணன் நீயன்றோ! அவ்வாறாக உனது அருட்கடாட்சத்தால் கிடைத்த குழந்தை ஆண்டுகள் ஐந்து ஆகியும் வாய்திறந்து பேசாத காரணம் யாது? இஃது உனது திருவிளையாடலோ? அன்றி நாங்கள் செய்த வினைப்பயனோ! அறியோம். ஐய! உனை அடைந்தார்க்கு தீவினைப்பயன் எங்குபற்றும்! பற்றாதே! இது உனது திருவிளையாடல்தான் ஆகும். ஆதலில் அடியேங்களை இனியும் சோதிக்காதே! மதலையைக்கொடுத்த நீ அதற்கு மழலைச் சொற்களையும் கட்டாயம் கொடுத்தருளவேணும். இச்சண்முகவிலாசத்திலேயே நாங்கள் இருவரும் பழியாக ஓர் மண்டலம் தவம் கிடப்போம். அதற்குள் உனது அருளால் தோன்றிய குமரகுருபரன் வாய்திறந்து மழலையாடி அதைக்கேட்டு பேரானந்தமடையும் பாக்யம் அடியேங்கட்கு அருளாது ஒழிவாயேயாகில், உன் திருமுன்பே உயிர் துறப்போம். இது நிச்சயம் என்று உறுதிமொழிபுகன்று அவ்விடத்திலேயே சரவணபவனது சடக்ஷரமந்திரத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு அநுதினமும் பெற்றோர்கள் இருவரும் முருகப்பெருமானது சேவடிபோற்றி அவன் புகழ்பாடி 39 நாட்களையும் கடத்தினார்கள்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம:

திருவா வினன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவா வினன்குடி வானூர் பரங்குன்று சீரலைவாய்
திருவா வினன்குடி யேரகங் குன்றுதொ ருடல்சென்ற
திருவா வினன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே.

—கந்தரந்தாதி.

C. C. P. Works, Ltd., Madras.